சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து (குறள் எண்:1010)

பொருள்: சிறந்த உள்ளம் கொண்ட செல்வர்களுக்கு ஏற்படும் சிறதளவு வறுமையின் நிழல்கூட மழை பொய்த்து விட்டதற்கு ஒப்பானதாகும்.

பழநி நகராட்சி

2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் பழனியாண்டவர் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்,பழநி
நாள்.25.08.2022

நகர்மன்ற தலைவர்,
பழநி நகராட்சி.

83. பழநி நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி.பேருந்து நிலையத்தில் தென் கிழக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்திற்கு 27.07.2022 ஆம் நாளன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு குத்தகைதாரர்கள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர்.

உரிம இனத்தின் பெயர்: வ.உ.சி.பேருந்து நிலையத்தில் தென் கிழக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம்.

ஏலம்

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை

ஒப்பந்தப்புள்ளி

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ (வருடம் ஒன்றிற்கு)
1.	திரு.ஆர்.வீரக்குமார், த/பெ.ராம்ராஜ், 9/4, கோபால் நகர் 2வது தெரு, மங்களம் ரோடு, திருப்பூர்.	36,75,000/–
2.	திரு.என்.கருப்புச்சாமி, த/பெ.நாச்சிமுத்து கவுண்டர், 85, டி.கே.என்.புதூர்,பழநி.	36,65,000/–

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.ஆர்.வீரக்குமார், திருப்பூர் என்பவர் வருடம் ஒன்றிற்கு ரூ.36,75,000/–க்கு (ரூபாய்.முப்பத்தி ஆறு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த ஆண்டை காட்டிலும் ரூ.17,73,187/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையை காட்டிலும் ரூ.18,62,313/– அதிகமாக உள்ளதாலும், திரு.ஆர்.வீரக்குமார், திருப்பூர் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (5033/2021/அ1).

84. பழநி நகராட்சிக்கு சொந்தமான அருள்ஜோதி வீதி, சித்தநாதன் திருமண மண்டபம் எதிரில் உள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.11.2019 **முதல்** 31.10.2022 **வரையுள்ள மூன்று ஆண்டு தொகுப்பு காலத்திற்கு ஏலம் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு திரு.எம்.மங்கபதி முருகன், த/பெ கே.மாடசாமி,** 64B, **மதனபுரம், அடிவாரம், பழநி என்பவருக்கு** (வரி விதிப்பு எண்.080/BD01/00047) **குத்தகை உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.**

குத்தகைதாரர் மேற்கண்ட கழிப்பிடத்திற்கு முன்புறம் மழைநீர் கால்வாய் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படாததை காரணம் காட்டி குத்தகை உரிமத்தை பொறுப்பு பெற்றுக்கொள்ளவில்லை. மேலும், கட்டணக் கழிப்பறையை தொடர்ந்து குத்தகைதாரர் நடத்தவில்லை. எனவே, மேற்காணும் கட்டணக் கழிப்பறைக்கு மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

குத்தகை இனத்தின் பெயர்	முன் வைப்புத் தொகை ரூ. இலட்சத்தில்	சால்வன்சி 01.04.2022க்கு பிறகு பெறப்பட்டதாக இருக்க வேண்டும். ரூ. இலட்சத்தில்	சால்வன்சி இல்லாத பட்சத்தில் கூடுதல் பொறுப்பு தொகை ரூ. இலட்சத்தில்
அருள்ஜோதி வீதி, சித்தநாதன் திருமண மண்டபம் எதிரில் உள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறை	1.00	5.00	5.00

அலுவலக குறிப்பு:
அனுமதிக்கலாம் (ந.க.எண்.3055/2021/அ1)

85. பழநி நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி மத்திய பேருந்து நிலைய 53 விரிவாக்க கடைகளுக்கு 31.03.2019 ஆம் நாளன்று 9 ஆண்டுகள் குத்தகை உரிமம் நிறைவு பெற்றுள்ளது. அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள்.03.07.2007–ன் படி 01.04.2019 முதல் 31.03.2022 வரை கீழ்க்காணும் கடை இனங்களுக்கு மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு மாத வாடகை பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல், பத்திரப்பதிவு வழிகாட்டு மதிப்பீடு மற்றும் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை சீராய்வு மேற்கொண்டு மாத வாடகை மறு நிர்ணயம் செய்து உரிய உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பழநி நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும், கடை குத்தகைதாரர்களின் பொருளாதார நிலையை கருத்திற் கொண்டும், தற்போது கருத்துருவிற்கு வழங்கப்பட்ட மாத வாடகையின் தொகையினை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும், ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி வரும் மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்தப்பட்ட கடைகளுக்கு மட்டும் தற்காலிகமாக கணினியில் மாத வாடகையை பதிவேற்றம் செய்யவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் இறுதியாக வழங்கும் உத்திரவின் அடிப்படையில் மாறுதலுக்கு உட்பட்டும் 53 கடைகளுக்கும் தற்காலிகமாக மாத வாடகையினை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

புதிய பேருந்து நிலைய விரிவாக்க ஆர்.சி.சி. கடைகள்

வ .எண்	கடை வரிவிதிப்பு எண்	குத்தகைதாரர் பெயர்கள்	குத்தகை இனத்தின் விபரம்	குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற நாள்	கட்டிடத்தின் அளவு (சதுரடி)	30.06.2019–ல் பெறப்பட்ட மாத வாடகை தொகை	தற்போது கண்காணிப்பு குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு மறு நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை (ரூ) (01.04.2019 முதல் 31.03.2022 வரை)
1	2	3	4	5	6	7	8
1	080/3051	சாகுல் ஹமீது	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 1 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
2	080/3052	எ.மன்சூர் சுல்தான்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 2 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	6620	8064
3	080/3053	சையது அபுதாகிர்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 3 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	6620	8064
4	080/3054	எ.அசரப் அலி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 4 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
5	080/3056	என்.ராமகிருஷ்ணன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 6 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
6	080/3057	வி.சையது தமீம்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 7 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
7	080/3058	எம்.சாகுல் ஹமீது	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள்8 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
8	080/3059	பி.ஸ்ரீநிவாசன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 9 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5490	8064
9	080/3060	எ.அப்துல் ரஹ்மான்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 10 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5490	8064

10	080/3061	எம்.சபிதா பானு	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 11 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5555	8064
11	080/3062	எ.முகமது நூர்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 12 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5490	8064
12	080/3063	கே.முகமது அப்துல்லா	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 13 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5555	8064
13	080/3064	எஸ்.சதுரங்கபாணி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 14 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5556	8064
14	080/3065	நீலவன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 15 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5730	8064
15	080/3066	பி.கமலம்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 16 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5357	8064
16	080/3067	எ.அகமது அலி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 17 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
17	080/3068	எஸ்.மோகன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 18 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5502	8064
18	080/3069	எஸ்.பழனிச்சாமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 19 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
19	080/3070	பி.கந்தப்பன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 20 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5528	8064
20	080/3071	எம்.பாபு	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 21 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5357	8064

21	080/3072	எ.சின்ன தங்கம்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 22 (பைபாஸ் ரோடு)	31.03.2019	112	5425	8064
22	080/3073	எம்.எஸ்.ஜாபர் நிஷா	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 23	31.03.2019	112	5425	10304
23	080/3074	கே.என்.ஜீவா	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 24	31.03.2019	112	5490	10304
24	080/3075	எம்.முகமது அனீஸ் ரஹ்மான்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 25	31.03.2019	112	6745	10304
25	080/3076	கே.சையது முகமது	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 26	31.03.2019	112	9284	10676.6
26	080/3077	எ.ஜாபர் அலி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 27	31.03.2019	112	5555	10304
27	080/3078	எஸ்.பச்சைமுத்து	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 28	31.03.2019	112	5555	10304
28	080/3079	எ.சாகுல் ஹமீது	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 29	31.03.2019	112	6547	10304
29	080/3080	எம்.அங்குச்சாமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 30	31.03.2019	112	5490	10304
30	080/3081	எம்.அங்குச்சாமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 31	31.03.2019	112	5555	10304
31	080/3082	ஜே.சுந்தர்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 32	31.03.2019	112	6676	10304
32	080/3083	வி.ராஜேஸ்வரி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 33	31.03.2019	112	5425	10304
33	080/3084	டி.மகாலட்சுமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 34	31.03.2019	112	5357	10304
34	080/3085	எஸ்.குமார்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 35	31.03.2019	112	5490	10304
35	080/3086	வி.எஸ்.மகேந்திரன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 36	31.03.2019	112	5488	10304

36	080/3087	எம்.சம்சுதீன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 37	31.03.2019	112	9920	11408
37	080/3088	என்.கணேசன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 38	31.03.2019	112	5425	10304
38	080/3089	என்.வெங்கடாச்சலம்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 39	31.03.2019	112	5490	10304
39	080/3090	என்.சீனிவாசன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 40	31.03.2019	112	6745	10304
40	080/3091	கே.பழநி தாசன்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 41	31.03.2019	112	8596	10304
41	080/3092	எ.சாகுல் ஹமீது	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 42	31.03.2019	112	5490	10304
42	080/3093	டி.மகாலட்சுமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 43	31.03.2019	112	5290	10304
43	080/3094	எஸ்.பழனிச்சாமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 44	31.03.2019	112	10580	12167
44	080/3095	எஸ்.நாகலட்சுமி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 45	31.03.2019	112	5488	10304
45	080/3096	எ.முகமது அலி ஜின்னா	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 46	31.03.2019	112	5323	10304
46	080/3097	எ.சின்ன தங்கம்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 47	31.03.2019	112	5422	10304
47	080/3098	எ.ரியாஸ்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 48	31.03.2019	112	11374	13080
48	080/3099	எ.மன்சூர் சுல்தான்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 49	31.03.2019	112	12167	13992
49	080/3100	எம்.அப்பாஸ் மந்திரி	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 50	31.03.2019	112	5756	10304
50	080/3101	எஸ்.விஜய் ஆனந்த்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 51	31.03.2019	112	6745	10304
51	080/3102	எ.இதயத்துல்லா	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 52	31.03.2019	1925	42585	138600

52	080/3123	எ.ஹபீப் ரஹ்மான்	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 53	31.03.2019	112	2210	8064
53	080/3126	டி.என்.எஸ்.டி.சி பஸ் புக்கிங் ரூம் மதுரை	புதிய பேருந்து நிலைய விரிவாக்க கடைகள் 54	31.03.2019	112	1923	8064

அலுவலகக்குறிப்பு :

1. பழநி நகராட்சியின் 9 ஆண்டுகள் முடிவுற்ற 53 கடைகளுக்கு மாத வாடகையை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால் தற்காலிமாக மாத வாடகையை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. தற்காலிகமாக நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு கடையின் ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்திய கடைகளுக்கு மட்டுமே மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும் இறுதியாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து உத்திரவு வரும் வரை இந்நகராட்சியின் நிதிநிலைமையை கருத்திற்கொண்டும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், பொது மக்களின் அன்றாட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளவும் மறு நிர்ணயம் செய்யப்பட்ட புதிய மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.119/2019/அ1)

86. பழநி நகராட்சிக்கு சொந்தமான புதுதாராபுரம் ரோடு 4 ஆர்.சி.சி. கடைகளுக்கு 31.03.2019 ஆம் நாளன்று 9 ஆண்டுகள் குத்தகை உரிமம் நிறைவு பெற்றுள்ளது. அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள்.03.07.2007–ன்படி 01.04.2019 முதல் 31.03.2022 வரை கீழ்க்காணும் கடை இனங்களுக்கு மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு மாத வாடகை பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல், பத்திரப்பதிவு வழிகாட்டு மதிப்பீடு மற்றும் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை சீராய்வு மேற்கொண்டு மாத வாடகை மறு நிர்ணயம் செய்து உரிய உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பழநி நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும், கடை குத்தகைதாரர்களின் பொருளாதார நிலையை கருத்திற் கொண்டும், தற்போது கருத்துருவிற்கு வழங்கப்பட்ட மாத வாடகையின் தொகையினை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும், ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி வரும் மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்தப்பட்ட கடைகளுக்கு மட்டும் தற்காலிகமாக கணினியில் மாத வாடகையை பதிவேற்றம் செய்யவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் இறுதியாக வழங்கும் உத்திரவின் அடிப்படையில் மாறுதலுக்கு உட்பட்டும் 4 கடைகளுக்கும் தற்காலிகமாக மாத வாடகையினை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

புதுதாராபுரம் ரோடு ஆர்.சி.சி. கடைகள்

வ.எண்	கடை வரிவிதிப்பு எண்	குத்தகைதாரர் பெயர்கள்	குத்தகை இனத்தின் விபரம்	குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற நாள்	கட்டிடத்தின் அளவு (சதுரடி)	30.06.2019–ல் பெறப்பட்ட மாத வாடகை தொகை	தற்போது கண்காணிப்பு குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு மறு நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை (ரூ) (01.04.2019 முதல் 31.03.2022 வரை)
1	2	3	4	5	6	7	8

1	080/3119	ஞான பண்டிதன்	புதுதாராபுரம் ரோடு கடை 1	31.03.2019	112	6547	7529.05
2	080/3120	எ.முகமது அலி	புதுதாராபுரம் ரோடு கடை 2	31.03.2019	112	5489	6608
3	080/3121	வி.கருப்புச்சாமி	புதுதாராபுரம் ரோடு கடை 3	31.03.2019	112	5951	6843.65
4	080/3122	கே.பாலசுப்பிரமணியன்	புதுதாராபுரம் ரோடு கடை 4	31.03.2019	112	5422	6608

அலுவலகக்குறிப்பு :

1. பழநி நகராட்சியின் 9 ஆண்டுகள் முடிவுற்ற புதுதாராபுரம் ரோடு 4 ஆர்.சி.சி. கடைகளுக்கு மாத வாடகையை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால் தற்காலிமாக மாத வாடகையை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. தற்காலிகமாக நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு கடையின் ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்திய கடைகளுக்கு மட்டுமே மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும் இறுதியாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து உத்திரவு வரும் வரை இந்நகராட்சியின் நிதிநிலைமையை கருத்திற்கொண்டும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், பொது மக்களின் அன்றாட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளவும் மறு நிர்ணயம் செய்யப்பட்ட புதிய மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.119/2019/அ1)

87. பழநி நகராட்சிக்கு சொந்தமான இடும்பன் இட்டேரி ரோடு ஆர்.சி.சி. 16 கடைகளுக்கு 31.03.2019 ஆம் நாளன்று 9 ஆண்டுகள் குத்தகை உரிமம் நிறைவு பெற்றுள்ளது. அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள்.03.07.2007–ன்படி 01.04.2019 முதல் 31.03.2022 வரை கீழ்க்காணும் கடை இனங்களுக்கு மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு மாத வாடகை பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல், பத்திரப்பதிவு வழிகாட்டு மதிப்பீடு மற்றும் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை சீராய்வு மேற்கொண்டு மாத வாடகை மறு நிர்ணயம் செய்து உரிய உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பழநி நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும், கடை குத்தகைதாரர்களின் பொருளாதார நிலையை கருத்திற் கொண்டும், தற்போது கருத்துருவிற்கு வழங்கப்பட்ட மாத வாடகையின் தொகையினை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும், ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி வரும் மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்தப்பட்ட கடைகளுக்கு மட்டும் தற்காலிகமாக கணினியில் மாத வாடகையை பதிவேற்றம் செய்யவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் இறுதியாக வழங்கும் உத்திரவின் அடிப்படையில் மாறுதலுக்கு உட்பட்டும் 16 கடைகளுக்கும் தற்காலிகமாக மாத வாடகையினை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

இடும்பன் இட்டேரி ரோடு ஆர்.சி.சி. கடைகள்

வ.எண்	கடை வரிவிதிப்பு எண்	குத்தகைதாரர் பெயர்கள்	குத்தகை இனத்தின் விபரம்	குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற நாள்	கட்டிடத்தின் அளவு (சதுரடி)	30.06.2019–ல் பெறப்பட்ட மாத வாடகை தொகை	தற்போது கண்காணிப்பு குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு மறு நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை (ரூ) (01.04.2019 முதல் 31.03.2022 வரை)

1	2	3	4	5	6	7	8
1	080/3103	அபிபுல்லா	இடும்பன் இட்டேரி ரோடு கடை 1	31.03.2019	94	2017	3008
2	080/3104	அப்துல் காதர்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 2	31.03.2019	94	2017	3008
3	080/3105	என்.செந்தில்குமரன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 3	31.03.2019	94	2659	3057.85
4	080/3106	என்.ராமகிருஷ்ணன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 4	31.03.2019	94	2017	3008
5	080/3107	மீனாட்சி	இடும்பன் இட்டேரி ரோடு கடை 5	31.03.2019	94	2156	3008
6	080/3108	செல்லம்மாள்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 6	31.03.2019	94	2918	3355.70
7	080/3109	பி.மீனாட்சி	இடும்பன் இட்டேரி ரோடு கடை 7	31.03.2019	94	2169	3008
8	080/3110	பி.மீனாட்சி	இடும்பன் இட்டேரி ரோடு கடை 8	31.03.2019	94	2116	3008
9	080/3111	எம்.பாபு	இடும்பன் இட்டேரி ரோடு கடை 9	31.03.2019	94	1985	3008
10	080/3112	நீலவன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 10	31.03.2019	94	1985	3008
11	080/3113	எம்.ராமகிருஷ்ணன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 11	31.03.2019	94	1998	3008
12	080/3114	எஸ்.பரமேஸ்வரி	இடும்பன் இட்டேரி ரோடு கடை 12	31.03.2019	94	2017	3008
13	080/3115	கே.விஸ்வநாதன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 13	31.03.2019	94	2072	3008
14	080/3116	கே.சௌந்திரராஜன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 14	31.03.2019	94	1998	3008
15	080/3117	எஸ்.குகன்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 15	31.03.2019	94	1985	3008
16	080/3118	அப்துல் காபர்	இடும்பன் இட்டேரி ரோடு கடை 16	31.03.2019	94	2000	3008

அலுவலகக்குறிப்பு :

1. பழநி நகராட்சியின் 9 ஆண்டுகள் நிறைவு பெற்ற இடும்பன் இட்டேரி ரோடு ஆர்.சி.சி. 16 கடைகளுக்கு மாத வாடகையை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால் தற்காலிமாக மாத வாடகையை கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. தற்காலிகமாக நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு கடையின் ஒரு மாத வாடகையை 12 ஆல் பெருக்கி மொத்த தொகையினை முன்வைப்பு தொகையாக பெறவும், கடை புதுப்பித்தல் கட்டணம் செலுத்திய கடைகளுக்கு மட்டுமே மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்யவும் இறுதியாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து உத்திரவு வரும் வரை இந்நகராட்சியின் நிதிநிலைமையை கருத்திற்கொண்டும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், பொது மக்களின் அன்றாட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளவும் மறு நிர்ணயம்

செய்யப்பட்ட புதிய மாத வாடகையை தற்காலிகமாக கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.119/2019/அ1)

88. பழனி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண்.3, பிளாக் எண்.15, சர்வே எண்.836/1A1–ல் உள்ள வையாபுரிகுளத்தில் நகராட்சியால் கட்டப்பட்ட கழிப்பறை மற்றும் குளியலறையை அகற்றக்கோரி திரு. சந்தானத்துரை மற்றும் 6 நபர்கள் தொடர்ந்த வழக்கு WP(MD)No.2228/2022ன் கீழ் தீர்ப்பு நாள்.03.02.2022ல் வரப்பெற்று அதன் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் நீ.வ.துறை மற்றும் வருவாய்துறையின் மூலம் நவீன கருவியை கொண்டு அளந்து வையாபுரி குளத்தினுள் அமைந்துள்ள கழிப்பறை மற்றும் குளியலறையை வருகின்ற 24.08.2022ம் தேதியில் காலை 11.30 மணியளவில் இடித்து அப்புறப்படுத்தப் போவதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 2277/2021/எப்1)

89. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு தொடர்பாக விளம்பரம் செய்வதற்கு நகர் மன்ற தீர்மான எண்.49 நாள்.13.07.2022ல் ரூ.6,00,000/– செலவினம் மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்கள் கடிதம் ந.க.எண்.170/செ.ம.தொ/2022 நாள்.04.07.2022 கடிதத்தில் பழநி நகராட்சியில் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள விளம்பர பதாகைகளை மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி செஸ் ஒலிம்பியாட் விளையாட்டு போட்டிக்கு பிளக்ஸ் மற்றும் பெயிண்ட் மூலம் ஓவியம் வரைந்து விழிப்புணர்வு தொடர்பாக விளம்பரம் செய்வதற்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1.பிளக்ஸ் விளம்பரம்

வ.எண்	விபரம்	எண்ணிக்கை	வண்ணம் கிரியேட்டர்ஸ், திருவள்ளுவர் சாலை, பழநி ரூ. (Including GST)	அன்னை பிரிண்டர்ஸ் & பைன்டர்ஸ், ராஜேந்திரா ரோடு,பழநி ரூ. (Including GST)	விக்னேஷ் பிரிண்டர்ஸ், புது தாராபுரம் ரோடு, பழநி ரூ. (Including GST)
			1	2	3
1	CHESS OLYMPIAD STAR FLEX SIZE– 10x10	1க்கு	ரூ.3000/–	ரூ.3100/–	ரூ.3200/–
2	RENT FLEXFRAME– CHESS OLYMPIAD	1க்கு	ரூ.1500/–	ரூ.1900/–	ரூ.1600/–

2.பெயிண்ட் மூலம் ஓவியம் வரைதல்.

வ.எண்	விபரம்	எண்ணிக்கை	ஸ்ரீ விநாயகா ஹார்டுவேர்ஸ் &பெயின்ட்ஸ், பழநி ரூ. (Including GST)	ஸ்ரீ குமரன் ஏஜென்சி, பழநி ரூ. (Including GST)	MKS ஹார்டுவேர்ஸ், காந்தி ரோடு பழநி ரூ. (Including GST)
			1	2	3
1	White Paint	38 Lt	ரூ.13,980/–	ரூ.13,300/–	ரூ.14,100/–
2	Black Paint	36 Lt	ரூ.12,700/–	ரூ.12,600/–	ரூ.12,950/–
3	Thinner	32 Lt	ரூ.5,100/–	ரூ.4.800/–	ரூ.5,200/–
4	4 Inch Brush	4 Nos	ரூ.600/–	ரூ.520/–	ரூ.650/–
5	2 Inch Brush	2 Nos	ரூ.250/–	ரூ.210/–	ரூ.220/–

1. மேற்கண்டுள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு பிளக்ஸ் விளம்பரத்திற்கு வரிசை எண்.1ல் கண்டுள்ள வண்ணம் கிரியேட்டர்ஸ், திருவள்ளுவர் சாலை, பழநி என்ற நிறுவனமும்
2. செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு பெயிண்ட் மூலம் ஓவியம் வரைந்து விழிப்புணர்வு செய்ய வரிசை எண்.2ல் கண்டுள்ள ஸ்ரீ குமரன் ஏஜென்சி, பழநி என்ற நிறுவனமும் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள மேற்கண்ட நிறுவனங்களுக்கு பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
மன்றம் அனுமதிக்கலாம்.

90. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 1 முதல் 6 வரை உள்ள (வார்டு எண் 1 முதல் 33 வரை) அனைத்து தெருக்கள், பொது இடங்கள் மற்றும் நகரை சுற்றியுள்ள பகுதிகளில் தினசரி தூய்மை பணி மற்றும் ஒட்டு மொத்த தூய்மை பணிகளும் (Mass Cleaning) நடைபெற்று வருகிறது. மேலும், இந்நகரம் கோவில் நகரமாக உள்ளதாலும், தினசரி பக்தர்கள் 25,000 முதல் 1,00,000 வரை வருகை புரிவதாலும் நகரை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, பிரிவு 1 முதல் பிரிவு 6 வரை தூய்மை பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்துகொள்ள தேவையான உத்தேச செலவினம் ரூ.7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

91. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 1 முதல் 6 வரை உள்ள (வார்டு எண் 1 முதல் 33 வரை) அனைத்து தெருக்கள், பொது இடங்கள் மற்றும் நகரை சுற்றியுள்ள பகுதிகளில் தினசரி தூய்மை பணி மற்றும் ஒட்டு மொத்த தூய்மை பணிகளும் (Mass Cleaning) நடைபெற்று வருகிறது. மேலும், இந்நகரம் கோவில் நகரமாக உள்ளதாலும், தினசரி பக்தர்கள் 25,000 முதல் 1,00,000 வரை வருகை புரிவதாலும் நகரை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, பிரிவு 1 முதல் பிரிவு 6 வரை தூய்மை பணிகளுக்கு தேவையான தளவாடப் பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்துகொள்ள தேவையான உத்தேச செலவினம் ரூ.6,50,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

92. திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.(Ms) No.116 நாள்.24.08.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு:-
மன்றம் பதிவு செய்யலாம்(ந.க.எண்.4112/2022/எச்2)

93. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி பழநி **நகர தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement for Clean Cities)** நடைமுறைபடுத்த வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி (14.05.2022 முதல் 25.03.2023 வரை) பிரதி மாதம் 2வது சனிக்கிழமை, 4வது சனிக்கிழமை மற்றும் சிறப்பு நாட்களிலும் (காந்தி ஜெயந்தி, புவி நாள், சுற்றுச்சூழல் தினம், உலக தண்ணீர் தினம், உலக கழிப்பறை தினம், குழுந்தைகள் தினம், உலகலாவிய கைகழுவும் தினம்) தீவிர தூய்மை பணிகள், விழிப்புணர்வு முகாம் நடத்த அறிவுறுத்தப்பட்டது. மேற்காணும் விழிப்புணர்வில் தன்னார்வல அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள், பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும்

பொதுமக்கள் பங்களிப்பு பெருமளவில் இருக்க வேண்டியுள்ளது. நம் குப்பை நம் பொறுப்பு தொடக்க விழா நிகழ்வாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 03.06.2022ஆம் தேதியன்று சென்னையில் தொடங்கிவைத்த பின்பு இந்நகராட்சியிலும் நகர தூய்மைக்கான மக்கள் இயக்கம் விழிப்புணர்வு நடைபெற்றது.

மேலும், பழநி நகராட்சியில், நகர தூய்மைக்கான மக்கள் இயக்க விழிப்புணர்வு பேரணி நிகழ்வில் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் என் குப்பை என் பொறுப்பு துண்டறிக்கை மற்றும் பிளக்ஸ், பிஸ்கட், தண்ணீர், மஞ்சள் பை, ஆட்டோ மூலம் விளம்பரம், பரிசு பொருட்கள் மற்றும் இதர செலவினம் போன்றவற்றிற்கு உத்தேசமான செலவினம் ரூ.9,00,000/- (ரூபாய்.ஒன்பது இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி விழிப்புணர்வு மேற்கொள்ள பிளக்ஸ், துண்டு பிரசுரம் மற்றும் ஆட்டோ மூலம் விளம்பரம் போன்ற செலவினங்கள் மேற்கொள்வதற்கு கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1.என் குப்பை எனது பொறுப்பு துண்டறிக்கை

வ. எண்	விபரம்	முகில் டிஜிட்டல், பழனி. ரூ.	விக்னேஸ் பிரிண்டர்ஸ், பழநி. ரூ.	அன்னை பிரிண்டர்ஸ் & பைன்டர்ஸ், பழநி. ரூ.
1	என் குப்பை என் பொறுப்பு – துண்டறிக்கை 1க்கு	ரூ.2. 10/-	ரூ.2.45/-	ரூ.2.50/-
2	பச்சை தொட்டியில் சேகரிக்கப்பட வேண்டியவை- துண்டறிக்கை 1க்கு	ரூ.2. 10/-	ரூ.2.45/-	ரூ.2.50/-
3	நீலம் தொட்டியில் சேகரிக்க வேண்டியவை- துண்டறிக்கை 1க்கு	ரூ.2. 10/-	ரூ.2.45/-	ரூ.2.50/-
4	மக்கும் குப்பை/மக்காத குப்பை பற்றி விழிப்புணர்வு – துண்டறிக்கை 1க்கு	ரூ.2. 10/-	ரூ.2.45/-	ரூ.2.50/-
5	நெகிழி விழிப்புணர்வு- துண்டறிக்கை 1க்கு	ரூ.2.10/-	ரூ.2.45/-	ரூ.2.10/-

2.என் குப்பை எனது பொறுப்பு பிளக்ஸ்

வ.எண்	விபரம்	முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி ரூ.	அன்னை பிரிண்டர்ஸ் & பைன்டர்ஸ், ராஜேந்திரா ரோடு,பழநி ரூ.	விக்னேஷ் பிரிண்டர்ஸ், புது தாராபுரம் ரோடு, பழநி ரூ.
1.	பிளக்ஸ் பிரிண்டிங் 6x6 1க்கு	ரூ.360/-	ரூ.400/-	ரூ.375/-
2.	ஸ்டார் பிளக்ஸ் பிரிண்டிங் 6x6 1க்கு	ரூ.1080/-	ரூ.1200/-	ரூ.1225/-
3.	பிளக்ஸ் ப்ரோம் 6x6 1க்கு	ரூ.2000/-	ரூ.2600/-	ரூ.2590/-
4.	மஞ்சள் பை 12x14 1க்கு	ரூ.35/-	ரூ.37/-	ரூ.38/-

3.ஆட்டோ விளம்பரம்

வ.எண்	விபரம்	P.ராமசாமி, ஸ்ரீ மீனாட்சி சவுண்ட் சர்வீஸ், ராஜாஜி சாலை, பழநி	மஞ்சுளா சவுண்ட சர்வீஸ், 18, கௌசல்யா காம்ப்ளக்ஸ், ஆர்சி சர்ச் வாளகம்,பழநி	KM.சதுர்தீன், ஸ்டார் எலக்ட்ரானிக்& சவுண்ட் சர்வீஸ், பாய்கடை தெரு,பழநி
		1	2	3
1.	ஆட்டோ விளம்பரம் செய்ய நாள் 1க்கு வாடகை	ரூ.2200/-	ரூ.2250/-	ரூ.2100/-

1. மேற்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு என் குப்பை என் பொறுப்பு துண்டறிக்கை மூலம் விழிப்புணர்வுக்கு வரிசை எண்.1ல் கண்டுள்ள முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி என்ற நிறுவனமும்,
2. என் குப்பை என் பொறுப்பு பிளக்ஸ் அச்சடித்து வழங்க வரிசை எண்.2ல் கண்டுள்ள முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி என்ற நிறுவனமும்,
3. ஆட்டோ விளம்பரத்திற்கு வரிசை எண்.3ல் கண்டுள்ள KM.சதூர்தீன், ஸ்டார் எலக்ட்ரானிக்&சவுண்ட் சர்வீஸ், பாய்கடை தெரு, பழநி என்ற நிறுவனமும், குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள மேற்கண்டுள்ள நிறுவனங்களுக்கு பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பொது சுகாதார அசவர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2352/2022/எச்.2)

94. பழநி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக இயங்கி வரும் JCB சிறியது வாகனம் எண்.TN57AR6436 பழுதடைந்துவிட்டதால் பொது சுகாதாரம் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மராமத்து பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற JCB ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சிஸ், பழநி என்ற நிறுவனத்தின் மூலம் வாகனத்தில் மாற்றம் செய்ய வேண்டிய அனைத்து உபகரணங்களையும் மாற்றவும் வாகனத்தை புதுப்பிக்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3,00,000/- பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.அனுமதிக்கலாம் (ந.க.எண்.2710/2022/எச்.2)

95. பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு களப்பணிகளை முன்னிட்டு வரும் காலங்கள் மழைக்காலமாக இருப்பதால் 1 முதல் 33 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிக்காக டெமிபாஸ் (அபேட் மருந்து) போதியளவு இருப்பு வைத்திருக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளதன்படி, கொசு மருந்து தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் (TNMSC), சென்னை அவர்கள் கடிதத்தில் பரிந்துரைத்துள்ள அரசு அங்கீகாரம் பெற்ற கீழ்க்கண்ட நிறுவனத்தின் மூலம் நேரடியாக கொள்முதல் செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,22,750/-ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

பிரிவு 1 முதல் 6 வரை தேவையான மருந்துகள்							
வ. எண்	மருந்தின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	மருந்தின் அளவு	1லி விலை	மொத்தம் ரூ.	GST	மொத்தம் ரூ.
1	டெமிபாஸ் (அபேட்) 50% EC Emulsifiable	M/s.Unikil Pesticides(P) Ltd, No.17/1-B and C, Industrial Estate, Vidisha, Madhya Pradesh	150 லி	693.50	1,04,025	18725	122750

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம் (3786/2015/எச்.2)

96. பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN.57U3226 டிப்பர் லாரிக்கு (டாடா 709) தகுதிச்சான்று காலம் 05/06/2022-வுடன் முடிவடைந்துவிட்டதால் 2022-2023ஆம் ஆண்டுக்கு பழநி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கு கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

வ.எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் விபரம்	தொகை ரூ.
1.	KMA Motors, TATA MOTORS AUTHORISED SERVICE POINT, Dindigul	2,15,900/-
2.	Pandiyan Automobiles, Cumbum Road, Periyakulam	2,52,400/-
3.	Sri Vinayaga Automobiles, Trichy Road, Dindigul	2,26,400/-

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்-1ல் கண்டுள்ள KMA Motors, TATA MOTORS AUTHORISED SERVICE POINT, திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்வதற்கும், செலவினம் ரூ.2,15,900/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு:

பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.3875/2022/எச்.2)

97. பழநி நகராட்சி, திண்டுக்கல் மாவட்டம் MVM மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்கள், நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெறும் இடத்தில் பொதுமக்களின் வசதிக்காக தற்காலிக கழிப்பறை அமைத்து தண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் சேகரிக்கும் வசதி ஆகிய பணி மேற்கொண்டமைக்கு தொகை ரூ.2.25/- இலட்சத்திற்கு ஆன செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

1. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15-யின் கீழ் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.(ந.க.எண்.54/2022/இ2)

98. பழநி நகராட்சியில் குடிநீர் தேவைக்காக கோடைகால நீர்த்தேக்கத்திலிருந்து அடிவாரம் மேல்நிலை தொட்டிக்கு குடிநீர் பெறப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அடிவார மேல்நிலைத் தொட்டியில் உள்ள மேல்தளம், வயரிங் (மின்சாரவசதி) செய்தல் மற்றும் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளது. எனவே அடிவார மேல்நிலைத் தொட்டி பராமரிப்பு பணி மேற்கொண்டு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்காணும் பணிமேற்கொள்ள மதிப்பீடுதொகைரூ.5.00/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, மேலும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகை குடிநீர்நிதி2022-23ல் மேற்கொள்ளலாம்.(ந.க.எண்.3753/2022/இ2)

99. பழநி நகராட்சியில்குடிநீர் தேவைக்காக கோடைகால நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் பெறப்பட்டு நகர் முழுவதும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கோடைகால நீர்தேக்கத்தில் உள்ள Break Point பூச்சுபணி, வலை அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன்கருதி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியிருப்பதால்,பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00/-இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, மேலும் பணியினை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.3523/2022/இ2)

100. பழநி நகராட்சி பகுதிகளில்உள்ள 1 முதல் 33 வார்டுகளுக்கு DI பைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் போது ஏற்படும் அழுத்தங்களை சரிசெய்து, ஒரே சீரானமுறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தெருக்களில் வால்வுகள் பொருத்தப்படும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் விநியோகம் செய்யும் போது குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்யும் பணியும் அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி 1 முதல் 33 வார்டுகளுக்கு குடிநீர் (புதிய DI

பைப்மூலம்) விநியோகம் செய்ய வேண்டி பணிக்கு மதிப்பீடுரூ.8.00/–இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, மேலும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கான செலவினத் தொகை குடிநீர் நிதி 2022–23 ல் மேற்கொள்ளலாம்.(ந.க.எண்.3587/2022/இ2)

101. பழநி நகராட்சிபுதிய பேருந்து நிலையத்தில்உள்ளஇலவசகழிப்பிடத்தில்மராமத்து பணிகளான கதவுகள், பிளம்பிங், மின்வயரிங் ஆகிய பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.மேலும் புதியபேருந்து நிலைய வடக்குபுறம் அமைந்துள்ள கடைகளின் மேற்கூரை பகுதிகள் சேதமடைந்து தண்ணீர் கசிவு காணப்படுகிறது. இதனால் பேருந்து நிலையம் வரும் பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. எனவே, புதிய பேருந்து நிலையத்தில் வடக்கு பகுதியில் உள்ள கடைகளில் மேல்தள பராமரிப்பு பணிமேற்கொள்ள மதிப்பீடு ரூ.6.00/–இலட்சத்திற்குதயார் செய்யப்பட்டுள்ளது, மேற்படி பணியினைபொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கான செலவினத் தொகை பொதுநிதி2022–23ல் மேற்கொள்ளலாம்.(ந.க.எண்.3886/2022/இ2)

102. பழநி நகராட்சியில்குடிநீர் தேவைக்காக கோடைகால நீர்த்தேக்கம் மற்றும் பாலாறு அணையிலிருந்து குடிநீர் பெறப்பட்டு நகர் முழுவதும் முறையாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் அல்லாத மற்ற தேவைகளுக்கு பழநி நகராட்சி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் உள்ள நீரினை மக்கள் உபயோகிக்கின்றனர். அதனால் குடிநீர் விநியோகிக்கDI,GI மற்றும் அதன் தொடர்புடைய உதிரிபொருட்கள்தேவைப்படுகிறது. எனவே தேவையான பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.9.90/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொண்டால்தான் மக்களுக்கு முறையாக தங்கு தடையின்றி நீரினை விநியோகிக்க முடியும். மேற்படி பணியினை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. வரும்கோடைகாலத்தினைகருத்தில்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படிபணிக்கு ஆகும் செலவினத் தொகையினை குடிநீர்நிதி 2022–23 யில் மேற்கொள்ளலாம்.(ந.க.எண்.4045/2022/இ2)

103. பழநி நகராட்சி,பொது சுகாதார பிரிவு தேரடி வீதியில் அமையப்பெற்றுள்ள பிரிவு அலுவலகம் எண்.5 கட்டிடம் மிகவும் சேமைடைந்துள்ளதால் அதனை மராமத்து செய்ய ஆணையாளர் அவர்களால் உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் புதிய பேருந்து நிலையம் மேற்கு பகுதி பிரதான பயணிகள் நுழைவாயிலின் எதிர்புறம் உள்ள உயர்கோபுர மின்விளக்கு (HIGH MAST LIGHT)தூண் அப்பகுதியில் செல்லும் வாகனங்கள் மோதி அடிக்கடி சேதம் ஆகின்றது. மேற்படி தூணில் வாகனங்கள் மோதாத வண்ணம் தடுப்பு சுவர் கட்ட ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.4.20/– இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொதுநிதி 2022–23– மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.4044/2022/இ2)

104. பழநி நகராட்சியில் பொறியியற் பிரிவில் பொதுமக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள், பொதுநிதியில் பணிகள் மற்றும் அரசு துறை சார்ந்த விளம்பரங்கள் மேற்கொள்ளப்படவேண்டி உள்ளது. எனவே (ஆகஸ்ட் 2022 முதல் மார்ச் 2023 வரை)

பொதுநிதியில் விளம்பரம் மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.00/– இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை பொதுநிதி 2022–23–யில் மேற்க்கொள்ளலாம். (ந.க.எண்.3645/2022/இ2).

105. பழநி நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர்நிதியின் கீழ் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 விதி எண்.15–ன் (Sec–15) கீழ் பணிகளை அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	பணியின் பெயர்	ஒப்பந்த்தாரர் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	வையாபுரி குளத்தின் குறுக்கே முன்மொழியப்பட்டுள்ள சிறிய உயர்மட்ட பாலத்திற்கான மண் பரிசோதனை செய்யும் பணி	M/s.VarhaGeotachical works, Rajapalayam	ரூ.1.25/–
2.	பழநி நகராட்சி, புதிய வார்டு வரைமுறையின்படி சாலை பேரேடு மற்றும் அதன் தொடர்புடைய சாலை குறியீடு தயார் செய்யும் பணி	M/s.Ayothi Consultancy, Rajapalayam	ரூ.1.20/–
3.	பாலாறு தலைமை நீரேற்று நிலையம் Clear water sump 75 HP motor பழுது நீக்க பணிகள்	Thiru.P.Ramasamy, Palani	ரூ.1.75/.
4.	பழநி நகராட்சி குப்பைகிடங்கில் அடர்வனகாடுகள் அமைக்கும் பணி	Thiru.R.Ravikumar, Palani	ரூ.3.00/–

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.(ந.க.எண்.2846/2022/இ2)

106. பழநி நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர்நிதியின் கீழ் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 விதி எண்.15–ன் (Sec–15) கீழ் பணிகளை அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	பணியின் பெயர்	ஒப்பந்த்தாரர் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	பழநி நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கு உபயோக பயன்படுத்தபடும் ஈப்பு TN 57 U 7520– வாகனத்திற்கு மராமத்து மேற்கொள்ளும் பணி	பழநி வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் லிட். DD.673, திண்டுக்கல் ரோடு, சிவகிரிப்பட்டி, பழநி.	ரூ.0.23/–
2.	பழநி நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்புபணிகள் மேற்கொண்டபோது கடையின் முன்பு மஞ்சள் வர்ண கோடுகள் போடும் பணி	சு.ராதா கிருஷ்ணன்	ரூ.0.15/–

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.(ந.க.எண்.3744/2022/இ2)

107. பழநி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தினசரி வழங்கப்டும் குடிநீரீனை சுத்திகரிப்பு செய்யும் முறையினை பயன்படுத்த ஃபெரிக் ஆலம் கட்டிகளை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி ஃபெரிக் ஆலம் கட்டிகள் சுமார் 8MTகொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகையினை ரூ.1.75/– இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள 02.08.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	M/s.கமலாஸ் அண்ட் கோ, 303/2,போடிபாளையம் ரோடு, மலுமிச்சம்பட்டி போஸ்ட்,	0.90%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.1750/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0002049 நாள்.01.08.2022
2.	M/s.ரியோ அக்வா டெக், 63,ஸ்பென்சர் காம்பவுண்ட், குறிஞ்சி லாட்ஜ் அருகில், திண்டுக்கல்.	1.70%– மதிப்பீட்டிற்குஅதிகம் முன்வைப்புத் தொகை ரூ.1750/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0002050 நாள்.01.08.2022.

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/s.கமலாஸ் அண்ட் கோ, என்பவர் –0.90% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.90% குறைவாக கொடுத்துள்ள M/s.கமலாஸ் அண்ட் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.3722/2022/இ2)

108. பழநி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22–க்கான பழநி நகராட்சி, பழநி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00/–இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 29.07.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.N.கருப்புச்சாமி, 18/32,டி.கே.என் புதூர். ஆயக்குடி. பழநி.	0.70%–மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.6000/–TMBவங்கி வரைவோலை எண்.661114நாள். 28.07.2022
2.	திரு.K.ஆறுமுகம், 80, அப்பர் தெரு, பழநி.	0.80% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத்தொகை ரூ.6000/– கனரா வங்கி வரைவோலை எண்.158983 நாள்.28.07.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.N.கருப்புச்சாமி,என்பவர் –0.70% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.70% குறைவாக கொடுத்துள்ளதிரு.N.கருப்புச்சாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எ.ண்.2396/2022/இ1).

109. பழநி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–22 க்கான பழநி நகராட்சி 30 வது வார்டு வெண்மணி நகரில் புதிதாக போர்வெல் அமைத்து மின் மோட்டார் பொருத்தி பைப்லைனுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகைரூ.3.50/–இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 29.07.2022–ம் தேதியன்றுஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.N.கருப்புச்சாமி, 18/32,டி.கே.என் புதூர். ஆயக்குடி. பழநி.	0.67%–மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.3500/– TMBவங்கி வரைவோலை எண்.661148நாள். 28.07.2022
2.	திரு.K.ஆறுமுகம், 80, அப்பர் தெரு, பழநி.	1.3.%மதிப்பீட்டிற்குஅதிகம்முன்வைப்புத் தொகை ரூ.3500/– கனரா வங்கி வரைவோலை எண்.158982 நாள்.28.07.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.N.கருப்புச்சாமி,என்பவர் –0.67% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.67% குறைவாக கொடுத்துள்ள திரு.N.கருப்புச்சாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.2397/2022/இ1).

110. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.1723/2022/பி1, நாள்.01.04.2022–ன் படியும் பழநி நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு இவ்வலுவலக நகர்மன்றத் தீர்மானம் எண்.53/13.07.2022–ன்படி இரண்டு வாகனங்கள் 1. மகேந்திரா ஸ்கார்பியோ S112.2m Hawk–140 MH–2WD–75 2.மகேந்திரா பொலிரோ B6BSIV வாங்கப்பட்டுள்ளது. அவ்வாகனங்களுக்கு தற்போது தி நியூ இண்டியா அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கு ரூ.5,20,267/– செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சாலை வரிக் கட்டணங்கள் மாநில போக்குவரத்து துறை, பழநி(RTO) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள Invoice–ன்படி ரூ.4,39,846/– செலுத்தப்பட வேண்டும்.

எனவே, நகராட்சியின் நிர்வாக நலன் கருதி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. செலுத்தப்பட்ட செலவினத்தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டதை ஏற்கவும், மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் கூட்ட பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.
2. நிர்வாக நலன் கருதி பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டதை ஏற்கலாம். (ந.க.எண்.1586/2022/இ1)

111. பழநி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பணிகளுக்கு கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திண்டுக்கல், அவர்களின் கடிதம் ந.க.எண்.9085/2021/அ5, நாள்.30.05.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மதிப்பீடு தயார் செய்து வழங்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் இரண்டு

பணிகளுக்கு ரூ.30.20/– இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு, மாவட்ட ஆட்சியர்/தலைவர் திண்டுக்கல் மாவட்டம், மாவட்ட ஊரக முகமை, அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.9085/2021/அ5, நாள்.14.08.2022–ல், கீழ்க்காணும் இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் ,

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	பழநி நகராட்சி, சண்முகபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டங்கள் கட்டுதல் (SC–30.94%) (T–559,SC173)	18.40
2.	பழநி நகராட்சி 31ஆவது வார்டு ஆண்டவர் பூங்கா ரோடு அங்கன்வாடி மைய எண்.33612100502 புதிதாக கட்டடம் கட்டுதல் (SC–31.34%) T–1091, SC–342)	11.80
	மொத்தம்	30.20

அலுவலக குறிப்பு:–

1.நிர்வாக அனுமதி பெற்றுள்ள பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும். (ந.க.எண்.6509/2021/இ1)

112. பழநி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23–ன் கீழ் பழநி நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அறிவு சார்மையம் அமைக்கும் பணிக்குமதிப்பீட்டு தொகை ரூ186.50/–இலட்சத்தில் 22.07.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதிக்கான கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் விபரம் பின்வருமாறு

வ .எண்	கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கூர்ந்தாய்வுதகுதி விபரம்
1	திரு.நா.கருப்புச்சாமி, 18/32,டிகேஎன் புதூர் ஆயக்குடி(Po) பழநி(TK)	தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. 4.95%–மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகைரூ.1,86,500/– TMBவங்கி (Fixed Deposit)நிரந்தர வைப்புத் தொகை எண். 0553903நாள். 21.07.2022)
2	மெசர்ஸ்.கே.எஸ்.கன்ஸ்ட்ரக்சன் 1/67,அக்கரைப்பட்டி போஸ்ட், பழநி தாலுக்கா.	தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது.(6.70.%மதிப்பீட்டிற்குஅ திகம்முன்வைப்புத்தொகை ரூ.1,86,500/– கனரா வங்கி வரைவோலை எண்.158998 நாள்.28.07.2022)

22.07.2022–அன்று ஒப்பந்தபுள்ளி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டது.

வ .எண்	கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கூர்ந்தாய்வு தகுதி விபரம்
1	திரு.நா.கருப்புச்சாமி, 18/32,டிகேஎன் புதூர் ஆயக்குடி(Po) பழநி(TK)	மதிப்பீட்டு விலைவிகித்தை விட 4.90% சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு திறக்கப்பட்ட விலைப்புள்ளியில்(L1) திரு.நா.கருப்புச்சாமி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட4.90% கூடுதலாக உள்ளதால் விலை குறைப்பு கடிதம் கோரப்பட்டது.

அன்னார் வெளி சந்தையில் கட்டுமான பொருட்களின் விலைஅதிகமாக உள்ளதால் மதிப்பீட்டு விலையை விட4.90% கூடுதலாக பணி மேற்கொள்ள கடிதம் கொடுத்துள்ளார். எனவே, அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட 4.90% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.நா.கருப்புச்சாமி பழநி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

113. நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தி.மீனாட்சி தேவி , அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மான முன் வடிவு.

வார்டு எண்.16–ல் அமைந்துள்ள பழநி நகராட்சி பள்ளியின் ஒரு புறத்தில் அங்கன்வாடி மையம் பல வருடங்களாக செயல்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையத்தில் அன்றாடம் 20 குழந்தைகள் வீதம் படித்து வருகின்றனர். அங்கன்வாடி அமைந்துள்ள கட்டிடம் மிகவும் பழமையான உளவீனமானதுமாய் உள்ளது. மேலும் தரைதளம் ஈரமாகவே உள்ளது. குழந்தைகளின் நலன் வேண்டி அங்கன்வாடி மையத்தை அதன் அருகில் நகராட்சி இடத்தில் புதிய கட்டிடம் அமைத்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு.

114. நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தி.மீனாட்சி தேவி , அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மான முன் வடிவு.

வார்டு எண்.16–ல் அமைந்துள்ள பழநி நகராட்சிக்கு சொந்தமான சண்முகபுரம் பள்ளியில் 600–க்கு மேல் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். சண்முகபுரம் நகராட்சி பள்ளி அனைத்து வசதிகளுடன் இயங்கி வருவதால் வருடாவருடம் மாணவர் சேர்க்கை அதிகரித்துக் கொண்டே உள்ளதால் அங்கு பயிலும் மாணவர்களுக்கு வகுப்பறை வசதியில்லாமல் தினமும் பள்ளிக்கு வெளியில் உள்ள சமுதாய கூடத்திற்கு சென்று படிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு சண்முகபுரம் நகராட்சி பள்ளியினுள்ளே இயங்கி வரும் வட்டார கல்வி அலுவலகத்தை நகராட்சி ஆண்கள் பள்ளியில் காலியாக உள்ள அறைக்கு மாற்றி வட்டார கல்வி அலுவலகம் பயன்படுத்தி வந்த அறையினை மாணவர்களுக்கு கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு.

115. நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கா.புஷ்பலதா , அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மான முன் வடிவு.

வார்டு எண்.9–ல் அங்கன்வாடி மையம் இல்லை எங்கள் பகுதியில் உள்ள குழந்தைகள் அனைவரும் அடுத்த தெருவில் உள்ள அங்கன்வாடிக்கு செல்கிறார்கள். மேலும் எங்கள் பகுதியில் செய்தித்தாள் வாசிக்கும் அறை உள்ளது. இரண்டு மூன்று ஆண்டு காலமாக பூட்டியே உள்ளது. அதை தற்காலிக அங்கன்வாடியாக பயன்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

நகராட்சி அலுவலகம்,பழநி
நாள். 25.08.2022

நகர்மன்ற தலைவர்
பழநி நகராட்சி

ஒருமைக்கண் தான்னற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து (குறள் எண்:398)

பொருள்: ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

<u>பழநி நகராட்சி</u>

2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.30 மணியளவில் பழநி நகராட்சியில் அவசரக் கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் பழனியாண்டவர் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்,பழநி
நாள்.26.08.2022

நகர்மன்ற தலைவர்,
பழநி நகராட்சி.

116. பழனி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டிட அனுமதி வழங்கியது தொடர்பாக திரு.எட்டீஸ்வரன் என்பவர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், பழனி வழக்கு எண். O.S.No. 134/2022, இவ்வழக்கில் பழனி நகராட்சி ஆணையர் அவர்களை 4–ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்து உள்ளார் நகராட்சி ஆணையர் சார்பாக திரு.ப.மகேந்திரன், வழக்கறிஞர் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திட வழக்கின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி பெற்று வழக்கினை நடத்திட மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண். 2973/2022/எப்1**)

தீர்மானம்: அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

117. பழநி நகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் தெரு நாய்கள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை அறைக்கு தேவையான உபகரணங்கள் ரூ.4,00,000/– மதிப்பீட்டில் விநியோகம் செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.50 நாள்.13.07.2022ல் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்காணும் பணிக்கு 26.08.2022ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

வ. எண்.	நிறுவனத்தின் பெயர்	ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.	முன்வைப்புத் தொகை ரூ.
1.	ஸ்ரீ வெற்றிவேல் ஏஜென்சீஸ், எண்.9, முத்தையா சந்து, சின்னக்கடை தெரு, மதுரை–625001	4,28,750/–	ரூ.4000/– சலான் எண்.0002519 நாள்.25.08.2022
2.	எஸ்.ஜி.எண்டர்பிரைசஸ், எண்.25, கம்பர் தெரு, தேனி–625513	3,97,150/–	ரூ.4000/– சலான் எண்.0002521 நாள்.25.08.2022

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்டுள்ள எஸ்.ஜி.எண்டர்பிரைசஸ், தேனி என்ற நிறுவனம் ரூ.3,97,150/–க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. மேற்காணும் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

அனுமதிக்கலாம்(ந.க.எண்.1776/2021/எச்.2).

தீர்மானம்: அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

118. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை K/DIS.No.28369/J3/2018 நாள்.22.11.2018–ன்படி, பழனி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகள், பொது சுகாதார பிரிவு 3,4,5,6 மற்றும் உரக்கிடங்கு பகுதி தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பழநி நகராட்சியில் வீடு வீடாக சென்று மக்கும்/மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்தல், தெரு சுத்தம் செய்தல், கால்வாய் சுத்தம் செய்தல், செடி கொடிகள் வெட்டுதல், உரக்கிடங்கில் உரம் தயாரித்தல், குப்பைகளை தரம் பிரித்து வாங்குதல், தூய்மை பணிகளுக்கு இயங்கும் வாகனங்கள் இயக்குதல் ஆகிய பணிகளை தனியார் ஒப்பந்தம் (Out sourcing) மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கியதின் அடிப்படையில், பழநி நகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை ந.க.எண்.5878/2018/எச்.2 நாள்.31.08.2021–ன் படி திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 81 பணியாளர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் Sun (TamilNadu) Security Management Service Pvt Ltd, Madurai என்ற நிறுவனத்தார் மூலம் பணி மேற்க்கொள்ளப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.08.2022–வுடன் முடிவடைகிறது. எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யும் கால அளவு வரை அல்லது 01.09.2022 முதல் 28.02.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணிகள் கால தாமதமின்றி செயல்படுத்த பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலைவிகித அடிப்படையில் Sun (TamilNadu) Security Management Service Pvt Ltd, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்வதுடன் ஏற்கனவே உள்ள பணி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.576/– வீதம் மற்றும் காப்பீடு இதர வரி பிடித்தங்கள், சீருடை (ஊதியத்தில் 5%) மற்றும் இதர செலவினங்களுக்கு சேர்த்து ஆறு மாத காலத்திற்கு ஆகும் மொத்த உத்தேச செலவின தொகை ரூ.85,50,000 /–ஐ (ரூபாய் என்பத்து ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பணி ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஊதியம் (576x81x181) 1. EPF–12%+ Contribution–13% 2 ESI–4% காப்பீடு 3. இதர வரி, சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட பொருட்கள் (5%) 4. நிர்வாக செலவினம்(5%) இவை அனைத்தும் ரூ.576/–ல் உள்ளடக்கியது.	84,44,736
மொத்தம்	84,44,736
இதர செலவினம்	1,05,264
மொத்த செலவினம்	85,50,000

அலுவலகக்குறிப்பு

பொது சுகாதார அவசர அவசிய கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5878/2018/எச்2)

தீர்மானம்: அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

119. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/J2/2016–1, நாள்.17.12.2016–ல் பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணி, வகுப்பறைகளை கூட்டும் பணி, மதிய உணவு சாப்பிட்ட பின் உணவருந்தும் இடத்தினை சுத்தம் செய்யும் பணி, வகுப்பறைகள் மற்றும் பிற அறைகளை ஒட்டடை அடிக்கும் பணி, பள்ளி வளாகத்தில் புல் மற்றும் செடி கொடிகள் அகற்றுதல் போன்ற சுகாதார பணிகளை தனியார் ஒப்பந்தம் மூலம் (Outsourcing) மேற்கொள்ள அனுமதி வழங்கியதன் அடிப்படையில் பழநி நகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை ந.க.எண்.1705/2017/எச்.2 நாள்.29.09.2021–ன்படி GESM Environment Service, Chennai என்ற நிறுவனத்தார் மூலம் மேற்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

